**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 07.01.2026**
**OS. No. 119/2017**
**வழக்கு சாட்சி PW.1–I.K.சதாசிவம், த/பெ.கிருஷ்ணன் (லேட்)**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) மின் இணைப்பு எண் 2165 க்கு உண்டான நிலுவைத் தொகைக்காக மின் இணைப்பு எண்.2183 ஐ துண்டிக்கக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மின் இணைப்பு எண்.2165 என்பது பள்ளி கட்டிடம் கட்டுவதற்காக தற்காலிக மின் இணைப்பாக வழங்கப்பட்டதாகும். மின் இணைப்பு எண்.2183 ஆனது சிவம் அறக்கட்டளையில் இயங்கிவரும் பள்ளிக்கான அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டதாகும். இந்த வழக்கு அறக்கட்டளை சார்பாக தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். மின் இணைப்பானது அந்த அறக்கட்டளையின் அப்போதைய தலைவர் பெயரில் வாங்கப்பட்டதாகும். அந்த நிலமானது 4 நபர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். அந்த நிலத்தை அறக்கட்டளைக்கு பள்ளி நடத்துவதற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டது. அதில் ஒரு நபர் அப்போதைய அறக்கட்டளையின் தலைவராக இருந்தால் மற்ற மூன்று நபர்கள் ஆட்சேபனை இல்லை என்று மனு கொடுத்ததன் பேரில் அவர் பெயரில் பெறப்பட்டது.

2) அறக்கட்டளை தொடர்பாக அறக்கட்டளை பதிவு ஆவணங்கள் மற்றும் அதன் விதிமுறைகள் உள்ளதா என்றால் உள்ளது, அதை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன். அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் அறக்கட்டளையின் அனைத்து நடவடிக்கைகளும் செயல்படும் என்றால் சரிதான், தேவைப்படும் பட்சத்தில் பொதுகுழு கூடி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் அடிப்படையிலும் அறக்கட்டளை செயல்படும். அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதை பதிவு துறையில் ஒவ்வொரு ஆண்டும் பதிவு செய்யவேண்டும் என்றால் இல்லை.

3) மின் இணைப்பு ஆரம்ப காலத்தில் சிவம் அறக்கட்டளையின் தலைவர் என்ற அடிப்படையில் 1ம் பிரதிவாதி செந்தில்வேலு என்பவருக்கு வழங்கப்பட்டதா அல்லது அவரது தனிப்பெயரிலேயே வழங்கப்பட்டதா என்றால் அவரது தனிப்பெரில் தான் வழங்கப்பட்டது, ஆனால் மின் இணைப்பு பெறுவதற்கான வைப்பீடு மற்றும் நாளது தேதிவரை மின் கட்டணம் ஆகியவற்றை 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் செலுத்தவில்லை. மின் இணைப்பு எண்.2165 ஆனது கட்டுமான பணிகளுக்காக மட்டுமே தற்காலிகமாக வைப்பீடு கொடுத்ததன் பேரில்வழங்கப்பட்டது என்றும், அந்த கட்டுமான பணி முடிந்த பின்பு அது ரத்து ஆகிவிடும் என்றால் சரிதான், நாம் வேண்டாம் என்றால் மின் இணைப்பை துண்டிக்க சொல்லி எழுதியும் கொடுக்கலாம்.

4) மின் இணைப்பு எண்.2165 ஆனது 10.02.2015 ல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். பின்னர் 15.04.2016 ம் தேதியில் மாத மின் கட்டணம் செலுத்தாத காரணத்தால் 06.05.2016 ம் தேதியன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டு, 6 மாத காலம் ஆகியும் மின் இணைப்பு பெற்றுக்கொள்ளாத காரணத்தால் தங்களுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்று சொல்லி 5 ம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து 1 ம் பிரதிவாதி செந்தில்வேலுவிற்கு 28.04.2017 ம் தேதியில் ஒரு கடிதம் வழங்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை, அறக்கட்டளைக்கு எந்த வித தகவலும் கொடுக்கவில்லை, மின் இணைப்பு எண்.2165 ஐ துண்டிக்க சொல்லி அறக்கட்டளை சார்பாக 04.05.2016 ம் தேதியில் உதவி பொறியாளர் கொளத்தூர் தெற்கு அவர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

5) மின் இணைப்பு எண்.2165 ஆனது 1ம் பிரதிவாதி செந்தில்வேலு அவர்களின் பெயரில் உள்ளதால் அறக்கட்டளைக்கு எவ்வித அறிவிப்பும் வழங்கதேவையில்லை என்றால் சரியல்ல, மின் இணைப்பு அறக்கட்டளைக்காக பெறப்பட்டது ஆகும். 15.04.2016 ம் தேதியில் மின் இணைப்பு எண்.2165 ன் பயன்பாட்டு கட்டணமாக ரூ.26,074/– நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல, அறக்கட்டளைக்கு எவ்வித கணக்கும் இது தொடர்பாக வழங்கப்படவில்லை. அறக்கட்டளை சம்மந்தமாக 1ம் பிரதிவாதிக்கும், அறக்கட்டளைக்கும் இடையே வழக்கு நிலுவையில் உள்ளது என்றால்

சரிதான். இந்நீதிமன்றத்திலும் 1ம் பிரதிவாதி மின் வாரிய துறையினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அது தள்ளுபடி ஆகிவிட்டது.

6) 17.04.2017ம் தேதியில் அறக்கட்டளை சார்பாக 5ம் பிரதிவாதியான உதவி செயற்பொறியாளருக்கு ஒரு கடிதம் அனுப்பபட்டு, அதற்கு 06.05.2017ம் தேதியில் 5ம் பிரதிவாதி பதில் கடிதம் வழங்கியுள்ளார் என்றால் சரிதான், அது தான் வா.சா.ஆ.14, வா.சா.ஆ.15 ஆகும். அதில் மேற்கண்ட வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அதன் தீர்ப்பின் அடிப்படையில் தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த கடிதங்கள் சிவம் அறக்கட்டளை பெயரில் மின் இணைப்பு எண் 2183 ஐ மாற்றுவது தொடர்பாக அனுப்பப்பட்டதாகும். அதேபோல் மின் இணைப்பை பொறுத்து மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

7) அந்த ரிட் மனுக்களில் 5ம் பிரதிவாதி சார்பில் மின் இணைப்பு தனி நபர் பெயரில் உள்ளதால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல, விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு தான் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மின் இணைப்பானது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட பெயரில் உள்ளதால் அனைத்து நடவடிக்கைகளும் அது தொடர்பாக 1ம் பிரதிவாதிக்கு தான் தெரிவிக்கப்படும் என்றால் சரியல்ல.

(குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 21.01.2026ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.